**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **121/2024** |
| **பெயர்:** | **ஆதித் பார்கவ் -PW2** |
| **தந்தை பெயர் :** | **சங்கரன்** |
| **வயது:** | **31/2026** |
| **ஊர்:** | **பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **Canara Bank-Manager** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **19th day of August 2026**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம்11.06 AM**

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு.M.உஷா(Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. எதிரியானவர் எங்களுடைய வங்கியில் தான் கணக்கு வைத்துள்ளார் என்றால், சரிதான். அவருடைய வங்கி கணக்கு எண் என்னவென்றால், 12 01 10 10 18 216 ஆகும்.

2. எதிரியானவர் எந்த தேதியில் வங்கி கணக்கு தொடங்கினார் என்ற விபரம் சொல்லமுடியுமா என்றால், அதற்கான ஆவணம் இல்லை. எதிரியானவர் வங்கி கணக்கு தொடங்கியவுடனே காசோலை புத்தகம் கொடுத்தோமா என்றால், இல்லை, அவர் கேட்டுக்கொண்டதன்பேரில் பின்னர் கொடுத்தோம்.

3. எதிரியானவரின் வங்கி கணக்கு தற்போது செயல்பாட்டில் உள்ளதா என்றால், உள்ளது.

4. பொதுவாக எங்கள் வங்கியில், கணக்கில் பணம் இருக்கும்போதே கணக்கின் வாடிக்கையாளர் Stop Payment என்று எங்களது வங்கியில் கொடுக்க முடியுமா என்றால், பணம் இருக்கிறதோ இல்லையோ

கணக்கின் வாடிக்கையாளர் எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

5. எதிரியானவர் எந்த தேதியில் Stop Payment என்று எங்களது வங்கியில் கொடுத்தார் என்றால், அதற்கான ஆவணத்தை எடுத்துவருமாறு அழைப்பாணையில் கேட்கவில்லை, அதனால் அந்த ஆவணம் இல்லை.

6. இவ்வழக்கு காசோலையானது எந்த தேதியில் எங்களது வங்கிக்கு வசூலுக்கு வந்தது என்றால், ஆவணத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும்.

**முடிக்கப்பட்ட நேரம் 11:14 PM**

**(புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை முடிக்கப்பட்டது)**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தயாராக இல்லாததால் முடிக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.